# தமிழ் ஆழி



Scan Me


நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

ISBN 978-81-2344-010-1
Code No. A 4363 ₹ 300/-

## III. உரைநடை

## 1. பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் மானுட வாழ்வியல் சிந்தனைகள்

- முனைவர் பொ.மா.பழனிசாமி

உலக முதல் மொழி தமிழ்மொழி என்பர் மொழியியல் அறிஞர்கள். பழமை வாய்ந்த தமிழ் மொழிக்கெனச் சீர்மைமிகு சிறப்பியல்புகள் உள்ளன. அவற்றைச் செவ்வியல் பண்புகள் என்பர். அவையாவனவெனில், தொன்மை, தனித்தன்மை, பொதுமை, நடுநிலைமை, பலமொழிகளுக்கும் தாயாம். தன்மை, பண்பாடு, கலை, தனித்தியங்கும் தன்மை, இலக்கிய வளம், உயர் சிந்தனை, மொழிக் கோட்பாடு ஆகிய பதினொரு பண்புகளாம். மேற்கண்ட பதினொரு பண்புகள் தான் தமிழ் செம்மொழித் தகுதி பெறுவதற்கு அடிப்படைகளாகும்.

பழமையும், பெருமையும், அழகும், அருமையும் கொண்ட செம்மொழித் தகுதி பெற்ற தமிழ்மொழியில் தொல்காப்பியம், பதினெண் மேற்கணக்கு, பதினெண் கீழ்க்கணக்குப் போன்ற தொடக்க கால இலக்கண இலக்கியங்கள் தோற்றம் கண்டன. இவ்விலக்கியங்கள் தொல் தமிழ் மக்களின் வாழ்வியலைத் தெளிவாக வரையறை செய்துள்ளன. அவற்றுள் பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்கள் எவ்வாறு மனித வாழ்வியலை விளக்குகின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

### அறநூல்கள்

அறநூல்கள் பதினொன்றாகும். அவை எவையெனில் நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி ஆகியனவாகும்.

### நாலடியார்

சமண முனிவர்களால் எழுதப்பட்ட 400 பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூல். இது அறம், பொருள், இன்பம் என்ற முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. இந்நூல் மானுட வாழ்வியலை மிகத் தெளிவாக விளக்குகிறது. ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் சிறப்பாக வாழ அடிப்படை அறிவோடு கூடுதல் அறிவைப் பெறக் கல்வி கற்றல் மிக இன்றியமையாதது என்பதனை,

**“கல்வி கரையில கற்பவர் நாள்சில**
**மெல்ல நினைக்கின் பிணிபல தெள்ளிதின்**
**ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீர் ஒழிய**
**பாலுண்குருகின் தெரிந்து”**

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது.

Scanned with ACE Scanner

கல்வியிற் சிறந்த கண்டுபிடிப்பாளன், ஆராய்ச்சியாளன், சிந்தனையாளன் இவர்களின் செயல்பாடுகளைப் பொறுத்தே உலகத்தில் முன்னேற்றம் ஏற்படுகின்றது. "இளமையில் கல்வியைப் புறக்கணித்தவன், இறந்த காலத்தை இழந்தவன், எதிர்கால வாழ்விலும் இறந்தவன்" என்ற யூரிபிடிஸ் அவர்களின் கருத்து இவ்விடத்தில் எண்ணிப் பார்க்கத்தக்கது.

ஒருவரின் வாய்ச் சொல் அடுத்தவர் மனதைப் புண்படுத்தாமல் இருத்தல் சாலச் சிறந்தது. இதனை,

**"காவாது ஒருவன் தன் வாய்திறந்து சொல்லும் சொல்**
**ஓவாதே தடிமைச் சுடுதலால் - ஓவாதே**
**ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்**
**காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து"**

என்ற பாடல் வழி அறியலாம்.

ஒருவருக்கு ஆக்கமும் கேடும் அவர் சொல்கின்ற சொல்லால் வருவதால் அவர் தன்னுடைய சொல்லில் தவறு நேராமல் காத்துக் கொள்ளல் மனித வாழ்வியலில் ஓர் அம்சமாகும்.

## நான்மணிக்கடிகை

விளம்பி நாகனார் எழுதிய 106 பாடல்களைக் கொண்ட இந்நூல் நான்கு மணிகள் பதிக்கப் பெற்ற தோள் வளை போல் நான்கு நீதிகளை விளக்குவதுபோல் அமைந்துள்ளன. இந்நூலில் மானுட சமுதாயத்தை உயர்த்தும் நற்கருத்துகள் நிரம்ப உள்ளன. சான்றாக,

**"மனைக்கு ஆக்கம் மாண்ட மகளிர்"** (20)
**"மனைக்குப் பாழ் வாள்நுதலின்மை"** (22)
**"எள்ளற்க என்றும் எளியர் என்று"** (3)
**"ஈத்துண்பான் என்பான் இசைநடுவான்"** (62)
**"மடிமை கெடுவார்கண் நிற்கும்"** (90)

போன்ற பாடற் செய்திகளைக் கூறலாம். இல்லறம் நல்லறமாக அமைய மாண்புடைய மகளிரே காரணமாம். ஒவ்வொரு மனிதனும் சில பண்புகளில் உயர்ந்தும் சில பண்புகளில் குறைந்தும் இருக்கலாம். இதற்குச் சில சூழ்நிலைகள் காரணமாக இருக்கலாம். அதனால் சூழ்நிலை புரியாமல் ஒருவரை எள்ளி நகையாடுதல் கூடாது. அதனால் உறவும் நட்பும் பாழ்படும். தன் தேவையும் பிறர் தேவையும் அறிந்து ஒருவருக்கொருவர் தக்க நேரத்தில் உதவி வாழ்வது நல்லது. அதேபோல் சோம்பல் தன்மை ஒருவனை வளர விடாமல் தடுத்துவிடும்.

## இன்னா நாற்பது

மனித சமூகம் பயன்படுத்தக் கூடாதவற்றைக் கூறும் 40 பாடல்கள் அடங்கியது. இந்நூலில் மானுட சமூகம் எவற்றையெல்லாம் தவிர்த்து வாழ வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியைத் தரக்கூடிய கருத்துக்கள் நிறைந்துள்ளன. மனித வாழ்வியலில் காணப்படும் துன்பங்களின் மூலங்கள் எவை என்பதை எடுத்துக்காட்டுவனவாக இதன் பாடல்கள் அமைந்துள்ளன. உறவினர்களும் நண்பர்களும் நிறைந்த கூட்டத்தோடு வாழ்வது நம்பிக்கையையும் பாதுகாப்பையும் தருவதாகும். இதனை,

**"பந்தமில்லாத மனையின் வனப்பின்னா"** (1)

என்ற பாடல் வரி எடுத்தியம்புகின்றது.

Scanned with ACE Scanner

தேவைக்கு அதிகமான பயன்பாடு குறைவாக உள்ள பெரும் பொருளைச் சேமித்து வைப்பது பெருந்துன்பத்தைத் தரும் என்பதை,

**"உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பு இன்னா"** (16)

என்ற பாடலும்,

எதையும் சாதிக்கும் வல்லமை மிகுந்த திண்ணிய அறிவுடையவனின் மனம் ஏதோவொரு காரணத்தால் சோர்வடைந்து இருத்தல் அது சமுதாயத்திற்கு மிகுந்த துன்பத்தைத் தரும் என்பதனை,

**"உரனுடையானுள்ளம் மடிந்திருத்தல் இன்னா"** (18)

என்ற பாடல் வரியும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

## இனியவை நாற்பது

சமூகத்தில் எவையெவை இனிமை பயப்பன என்பதை வரிசைப்படுத்தி விளக்கும் வகையில் இதன் பாடல்கள் அமைந்துள்ளன. மானுட சமூகத்தில் கல்வி என்பது பிழைப்புக்கு வருவாய் தேடும் ஒரு வழிமுறை அல்ல. அது மெய்யைத் தேடுவதற்கும், அறநெறியைப் பயில்வதற்கும் மனித ஆன்மாவிற்குப் பயிற்சி அளிக்கும் ஒரு நெறிமுறையாகும். ஒரு மனிதன் கல்வி கற்க வேண்டிய வயதில் கல்வி கற்க வேண்டும். இளமையில் வறுமை காரணமாகக் கல்வி கற்பதை இழந்து விடக்கூடாது என்பதனை,

**"பிச்சை புக்காயினும் கற்றல் மிக இனிதே"** (1)

என்ற பாடல் எடுத்துரைக்கக் காணலாம்.

தன் சொந்த உழைப்பில்லாமல் பிறரிடம் கடன் பெற்று அதன் மூலம் ஒரு பொருளைப் பெற்றும் உண்டும் வாழ்வது ஒரு மனிதனுக்கு இழிவைத் தரும். எனவே கடனில்லாமல் வாழக் கற்றுக்கொள்வது இனிமையைத் தரும். இதனை,

**'கடமுண்டு வாழாமை காண்டல் இனிதே'** (10)

என்ற பாடல் வழி அறியலாம். அதே போலப் பிறருக்குப் பொருளைத் தானம் செய்கின்ற பொழுது தனது வருவாயைத் தாண்டி வழங்கிவிடவும் கூடாது. இதனை,

**'வருவாய் அறிந்து வழங்கல் இனிதே'** (22)

என்ற பாடல் வலியுறுத்துகின்றது.

## திருக்குறள்

உலகப் பொது மறையாம் திருக்குறள் மானுட வாழ்வியலின் களஞ்சியம். இது மனித சமூகம் அன்றாடம் பின்பற்றி வாழ்வதற்கு ஏற்ற 1330 குறள்களைக் கொண்டு விளங்குகிறது. அன்புடன் கூடிய அறத்தையும் அறத்துடன் கூடிய பொருளையும் நற்பொருளுடன் கூடிய இன்பத்தையும் வலியுறுத்துவது வள்ளுவமாகும்.

மானுட சமூகம் அன்பின் வழியில் நிற்பது. அன்பானது பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரக்கூடியது. இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடியது. இதனை,

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு"** (72)

Scanned with ACE Scanner

என்ற பாடல் வழி அறியலாம். மானுட வாழ்வியல் உயர்நிலை அடைய வேண்டுமாயின் வெளிப்படைத் தன்மையும், நம்பகத் தன்மையும், பொறுமைப் பண்பும், தூய்மை நிலையும் ஒவ்வொரு இடத்திலும் மானுடம் நிலைநாட்டுதல் வேண்டும். இதனை,

**"மனத்தூய்மை, செய்வினைத் தூய்மை இரண்டும்**
**இனத்தூய்மை தூவா வரும்" (455)**

என்ற பாடல் மூலம் வள்ளுவர் அறிவுறுத்துகின்றார்.

சமூக நிலைப்பாட்டில் ஒருவரை ஒருவர் சார்ந்து இருக்க வேண்டிய கட்டாய நிலை வரும்போது ஒருவர் பிரிவு மற்றொருவர்க்குத் தீராத துன்பத்தையும் இழப்பையும் ஏற்படுத்தும். எனவே எப்பாடுபட்டாவது பிரிவு நிலை வராமல் பாதுகாத்துக் கொள்வது அறிவார்ந்த தன்மையாகும்.

சமூகத்தில் கூடி வாழ்தல் கோடி நன்மை தரும் என்பதனை,

**"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க்கும் உரை" (1151)**

என்ற பாடல் மூலம் வள்ளுவம் வலியுறுத்துகின்றது.

**திரிகடுகம்**

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் உடல் நோயைத் தீர்க்க வல்லன போன்று இதன் பாடல்களில் வரும் மூன்று நற்கருத்துகள் மானுட சமூகத்தில் தூய்மைத் தன்மையை நிலை நிறுத்தும் வகையில் அமைந்துள்ளன.

சுற்றத்தார்க்கு உதவாதவனுடைய பொருளும் பசுமை நிறைந்த பயிர் தனக்குப் பயன்தரும் காலத்தில் அதனைக் காக்கும் இயல்பில்லாதவனுடைய உழவுத் தொழிலும் இளைய வயதில் கள் போன்ற மது வகைகளை உண்டு வாழ்கின்றவனுடைய குடிப்பிறப்பும் ஆகிய மூன்றும் நிலைத்து நிற்பது போலத் தோன்றிப் பின்பு நிலைத்து நிற்காமல் போய்விடும் என்பதனை,

**"கிளைஞர்க் குதவி தான் செல்வமும் பைங்கூழ்**
**விளைவின்கண் போற்றான் உழவும் - இளையனாய்க்**
**கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்**
**உள்ளன போலக் கெடும்" (59)**

என்ற பாடல் எச்சரிக்கை செய்வதை அறியலாம்.

நடைமுறை வாழ்க்கையில் முறையறிந்து செய்ய மாட்டாதவன் அடைந்த தலைமைத் தன்மையும், மனதில் உறுதிப்பாடு இல்லாதவன் மேற்கொண்ட தவமும், தனிமனித ஒழுக்கம் இல்லாதவனுடைய அழகும் நிலையில்லாதன என்பதனை,

**"முறை செய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்**
**நிறையிலான் கொண்ட தவமும் - நிறையொழுக்கம்**

**"தேற்றாதான் பெற்ற வனப்பும் இவை மூன்றும்**
**தூற்றின் கண் தூவிய வித்து" (80)**

என்ற பாடல் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

Scanned with ACE Scanner

## ஆசாரக் கோவை

மானுட சமூகம் தமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நியதிகளைப், பெருவாயில் முள்ளியார் விளக்க முற்படும்போது,

ஒரு மனிதன் வைகறை நேரத்தில் செய்ய வேண்டிய இன்றியமையாப் பணிகள் எவை என்பதை,

"வைகறை யாமந் துயிலெழுந்து தான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை" (4)

என்ற பாடல் விரிவாக விளக்கி நிற்கின்றது. அதாவது விடியற் காலையில் விழித்தெழுந்து தான் அன்று செய்ய வேண்டிய நற்செயல்களையும் வருவாய் தரக்கூடிய தொழில் சார்ந்த பணிகளையும் எண்ணிப் பார்ப்பதோடு அன்றைய செயல்கள் சிறப்பாக நிறைவேறத் தன்னைப் பெற்றெடுத்த தாயையும் தந்தையையும் இனிதே வணங்கிச் செயல்படுதல் நமது பாரம்பரியப் பண்பாடாகும் என்பதனை அறிவுறுத்துகின்றது.

மனித சமுதாயம் உணவு உண்ணும்போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை ஆசாரக்கோவை விரிவாக எடுத்துரைக்கின்றது. சான்றாக,

"உண்ணும் கால் நோக்கும் திசைகிழக்குக் கண்ணமர்ந்து
தூங்கான் துளங்காமை நண்டு இரீஇ, யாண்டும்
பிறிது யாது நோக்கானுரையான் தொழுது கொண்டு
உண்க உகாமை நன்று" (20)

என்ற பாடலை எடுத்துக்காட்டலாம். அதாவது உணவு உண்பவன் கிழக்கு நோக்கி அமர்ந்து ஆடாமல் அசையாமல் மனம் ஒன்றி உண்ண வேண்டும். ஏனெனில் கிழக்குத் திசை மங்கலத் திசை என்று மக்கள் நம்புகிறார்கள்.

## பழமொழி நானூறு

ஒரு கதையையோ, வரலாற்று நிகழ்வையோ சுட்டி, ஒவ்வொரு பாடலின் இறுதியில் அதற்குப் பொருத்தமான ஒரு பழமொழியைக் கூறி நீதியை எடுத்துரைப்பது இந்நூலின் பண்பாக உள்ளது.

செல்வமும் விளக்கமும் வலிமையும் அழகும் இளமையும் குடிப்பிறப்பும் என்ற இவையெல்லாம் நிலையில்லாதவை என்பதனை உணர்ந்து மானுட சமூகம் செயல்பட வேண்டும் என்பதனை,

"வளமையும் தேசும் வலியும் வனப்பும்
இளமையும் இப்பிறப்பும் எல்லாம் - உளவாய்
மதித்தஞ்சி மாறும்..." (392)

என்ற பாடல் தெளிவுறுத்தக் காணலாம்.

## சிறுபஞ்ச மூலம்

ஐந்து சிறுசிறு கருத்துக்கள் அடங்கிய பாடல்களைக் கொண்ட நூல்.

இவ்வுலகில் உள்ள எல்லாவற்றையும் அறிந்த ஒருவனும், ஏதொன்றையும் அறியாதவன் ஒருவனும், நற்குணம் முழுவதும் இல்லாத ஒருவனும், குற்றம் முழுவதும் இல்லாத ஒருவனும், ஒரு நூல் முழுவதையும் கற்றுத் தெளிந்தவன் ஒருவனும் இல்லை என்ற உண்மையை,

Scanned with ACE Scanner

"ஒருவன் அறிவானும் எல்லாம் யாதொன்றும்
ஒருவன் அறியாதவனும் - ஒருவன்
குண னடங்கக் குற்றமில்லானும் ஒருவன்
கணன் அடங்கக் கற்றானும் இல்" (31)

என்ற பாடல் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

உலகில் உள்ள எல்லாவற்றையும் தெளிந்து கொண்டு செயல்படுவதற்கு நமக்கு வாழ்நாள் போதாது எனினும், தெரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

## முதுமொழிக் காஞ்சி

முதியோர் சொல் மிகு பயன் பயக்கவல்லது என்பதனைக் கூறும் நூல். காலமறிந்து ஒரு செயலைச் செய்பவனின் முயற்சியானது வெற்றியைத் தரும் என்பதனையும், செல்வாக்குடன் வாழ விரும்புகின்ற ஒருவன் தான் எடுத்துக்கொண்ட செயலை நன்கு ஆராய்தல் வேண்டும் என்பதனையும்,

"காலமறியாதோன் கையுறல் பொய்" (7/4)

"வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்" (10/6)

ஆகிய முதுமொழிக் காஞ்சிப் பாடல்கள் வெளிப்படுத்தக் காணலாம்.

## ஏலாதி

உள்ளத்திற்கு உறுதி சேர்க்கும் ஆறு நிலைபேறுடைய கருத்துக்களை வழங்கும் நூல். தன் இல்லம் நோக்கி வரும் விருந்தினர் எவரிடத்திலும் இனிமையான சொற்களைக் கூறலும், மனம் கலந்து உறவாடலும், அறுசுவை உண்டி வழங்கி மகிழ்தலும், மானுட சமூகத்தில் எப்பொழுதும் நிலவுமானால் மண்வாழ் வாழ்க்கையே சொர்க்க வாழ்க்கையாகும் என்பதனை,

"இன்சொல் அளாவல் இடமினிது ஊன் யாவர்க்கும்
...............
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து" (7)

என்ற பாடல் எடுத்துரைக்கக் காணலாம்.

## முடிவுரை

மானுட வாழ்வின் பதிவுகளால் விளங்கும் பதினெண் கீழ்க்கணக்கு நீதி இலக்கியங்களில் மானுட விழுமியங்கள் நிறைந்து காணப்படுகின்றன. வாழ்நிலைக்கேற்ற உயர்நிலைப் பண்பாட்டினையும், நற்பண்புகளையும், தன்னம்பிக்கைச் சிந்தனைகளையும் இல்லறம் சார்ந்த இனிய பழக்கவழக்கங்களையும் கீழ்க்கணக்கு நூல்களில் காண முடிகின்றன. சமூகத்தில் ஒரு மனிதன் முழு மனிதனாக வாழ எல்லா வகையிலும் இவ்விலக்கியங்கள் வழிகாட்டி நிற்கின்றன. கற்போம், கற்றபடி வாழ்வோம்!

Scanned with ACE Scanner